# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1642/4 - 2010 පෙබරවාරි 22 වැනි සඳුදා - 2010.02.22

*1642/4 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இல. : ஊஆ/10/03/04.

**ஊவா மாகாண மாகாண சபையின் நியமனங்கள்**

ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் சீ. நந்தா மெத்தியு அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றேன் :-

1. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. கே. டி. சிறிசேன அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.07.01 ஆந் திகதி முதல், ஊவா மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் பணிகளை ஆற்றுவதற்கு,

2. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. கே. டி. சிறிசேன அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.07.01 ஆந் திகதி முதல் ஊவா மாகாண வீடமைப்பு ஆணையாளரின் பணிகளை ஆற்றுவதற்கு,

3. வைத்திய உத்தியோகத்தர் வைத்தியர் திரு. ஜீ. எம். ஏ. ஆர். அமரகோன் அவர்கள், 2009.07.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் தியதலாவ ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக பதிற் கடமையாற்ற,

4. வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எம். கே. டி. சேனாநாயக அவர்கள், 2009.07.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் பதுளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளராக பதிற் கடமையாற்ற,

5. பதுளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் திருமதி என். எஸ். ஆர். ஹேவாகீகனகே அவர்கள், 2009.07.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சுகாதார சேவை பணிப்பாளராக பதிற்கடமையாற்ற,

6. இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II யைச் சேர்ந்த திரு. வீ. பீ. விமல் கருணாதிலக அவர்கள், 2007.07.13 ஆந் திகதி முதல் ஊவா மாகாண சபையின் உள்ளக கணக்காய்வு பணிப்பாளரின் பணிகளை ஆற்றுவதற்கு,

7. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. எம். ஏ. பீ. தயாசெனரத் அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக,2009.08.20 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண வீடமைப்பு ஆணையாளரின் பணிகளை ஆற்றுவதற்கு,

8. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திருமதி ஜீ. டபிள்யூ. சீ. எஸ். பிரியபாஷினி அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.09.27 ஆந் திகதி முதல் 2009.10.11 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்கு ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரின் பணிகளை ஆற்றுவதற்கு,

9. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திருமதி ஏ. ஈ. என். தீபனீ அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.10.19 ஆந் திகதி முதல் 2009.10.30 ஆந் திகதிவரையிலான காலப்பகுதிக்கு பதுளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளராக பதிற்கடமையாற்ற,

10. இலங்கை பொறியியலாளர் சேவையின் வகுப்பு II யைச் சேர்ந்த திரு. எம். எல். சீ. பிரனாந்து அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2003.08.15 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை, ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (பொறியியலாளர் சேவை) பதிற்கடமையாற்ற,

11. திரு. கே. எச். எம். ஜே. சீ. குணதிலக அவர்கள், 2009.11.25 ஆந் திகதி முதல் ஊவா மாகாண விளையாட்டு பணிப்பாளரின் பதவியிலிருந்து நீக்கம் செய்தல்,

12. திரு. கே. ஏ. பெரேரா அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.11.25 ஆந் திகதி முதல் ஊவா மாகாண விளையாட்டு பணிப்பாளராக பதிற்கடமையாற்ற,

13. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. கே. டி. சிரிசேன அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.07.01 ஆந் திகதி முதல் ஊவா மாகாண கைத்தொழில் பணிப்பாளராக பதிற்கடமையாற்ற,

14. இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற திரு. கே. டி. ஜயவீர அவர்கள் 2009.09.18 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2010.12.17 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண காணி ஆணையாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள பணியாற்ற,

15. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திருமதி ஏ. ஈ. என். தீபனீ அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.12.24 ஆந்திகதி முதல் 2010.01.11 ஆந்திகதி வரையில் ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதிற்கடமையாற்ற,

16. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திருமதி ஏ. ஈ. என். தீபனீ அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2009.12.24 ஆந் திகதி முதல் 2010.01.11 ஆந் திகதி வரையில் ஊவா மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் செயலாளராக பதிற்கடமையாற்ற,

17. இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற திரு. கே. ஏ. பெரேரா அவர்கள், 2009.06.01 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2010.01.31 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும் மற்றும் சங்கங்கள் பதிவாளராகவும் ஒப்பந்த அடிப்படையில் மீள் பணியாற்ற,

18. இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற திரு. கே. டி. ஜயவீர அவர்கள், 2009.12.18 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2010.03.17 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண காணி ஆணையாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள பணியாற்ற,

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின்
செயலாளர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.

3- 317/1

எனது இல. : ஊஆ/10/03/04.

## ஊவா மாகாண மாகாண சபை

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் 154 ஊ (5) ஆம் பிரிவின் பிரகாரம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தை செய்துள்ளேன் என்பதை ஊவா மாகாணத்தின் ஆளுநர் கலுவாதேவகே நந்த மெதிவ் ஆகிய நான், இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

கௌரவ முதலமைச்சர் சஷிந்திர குமார ராஜபக்ஷ அவர்கள் - 2009.10.16 ஆந் திகதி முதல் ஊவா மாகாண சபையின் இளைஞர் அலுவல்கள், விளையாட்டுத்துறை, சமூக நலனோம்புகை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்சக்தி, வலு சக்தி, நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்துறை அமைச்சரான கௌரவ அ. அகலன் செந்தில் தொண்டமான் அவர்கள் இலங்கைக்கு திரும்பும் வரை மேற்குறிப்பிட்ட அமைச்சராக பதிற் கடமையாற்ற.

சீ. நந்த மெதிவ்,
ஊவா மாகாண ஆளுநர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.

3 - 317/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.